පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය: 79
ආයතනයේ නම: මුදල් කොමිෂන් සභාව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක **119(4)** යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத்தொடர் இலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர்: நிதி ஆணைக்குழு

பாரளுமன்றத்தின் அரசகணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்கள் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளை பாரளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No: 79
Name of the Institution: Finance Commission

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of standing order No. 119(4)

பாரளுமன்றத் தொடர் எண் : 79

நிறுவனத்தின் பெயர் : நிதி ஆணைக்குழு

	குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்		குறைபாடு/தற்போதைய நிலையை சரிசெய்வதற்கு நிறுவனம் எடுத்த நடவடிக்கைகள்
01	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம், தகுதியான/ ஒப்புதலளிக்க மறுக்கின்ற /பாதகமான மட்டத்தில் காணப்பட்டது.	01	நிறுவனத்தில் பாவனைக்குட்படுத்தப்பட்ட அச்சுப்பிரதி இயந்திரத்தினை அகற்றுவது தொடர்பான குறிப்பொன்றினை சிகாஸ் செயலியில் உள்ளடக்கினாலும், செயலியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அக்குறிப்பு இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது பயன்படுத்தும் திறைசேரி கணக்குக் கூற்றுக்களில் இடம்பெறாமையினால் ரூ.60,000 தொகையானது நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களில் கூடுதலாக பதியப்பட்டது. இதனால் பணிமுற்பண இணக்கக் கூற்றில் குறுக்குப் பதிவு பிழையின் காரணத்தினால் நேர் மற்றும் மறை பெறுமானங்களில் ஏற்பட்ட வித்தியாசமானது கணக்காய்வு அபிப்பிராயம் பாதகமான மட்டத்தில் காணப்படுவதற்கு காரணமாக இருந்தது. எதிர்வரும் காலங்களில் கணக்குகளைத் தயாரிக்கும் போது இவ்வாறான பிழைகள் பற்றி கருத்திற் கொண்டு கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

02	நிறுவனம் அதன் விடயப்பரப்பிற்கிணங்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணத் தவறிவிட்டது.	02	நிதி ஆணைக்குழுவிற்காக குறித்துரைக்கப்பட்ட அரசியலமைப்பு வகிபாகமானது முறையாக நிறைவேற்றப்பட்டு, அந்த வகிபாகத்தின் மூலமாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நேரடியாக அடைய முடியாது என்ற ஒரு பூர்வாங்க புரிந்துணர்வு இருந்தது. மாகாண சபைகளின் நிதித் தேவைகளை மதிப்பிடுவதும், அதற்கேற்றவாறு மாண்புமிகு ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் இருந்து மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதும் நிதி ஆணைக்குழுவின் முதன்மைப் பணியாகும். அதன்படி, மாகாண சபைகளுக்கான மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதன முதலீடு தொடர்பான வழிகாட்டல்களின் கீழ் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது மாகாண சபைகளே. இதன் காரணமாக, நிறுவன விடயப்பரப்புடன் நேரடியாக தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காண முடியவில்லை.
03	அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் தேர்ச்சியினை அளவிடுவதற்கு உதவும் குறிகாட்டிகள் அமைக்கப்படவில்லை.	03	மேலே 2 இன் கீழ் விளக்கப்பட்டுள்ளபடி, எமது நிறுவனம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணவில்லை, எனவே செயல்திறன் இலக்குகளை நிர்ணயிக்கவில்லை.

04	அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் தேர்ச்சியினை அளவிடுவதற்கு உதவும் குறிகாட்டிகள் அமைக்கப்படவில்லை.	04	மேலே 2 இன் கீழ் குறிப்பிட்டதன்படி, எமது நிறுவனம் தனது விடயப்பரப்புடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணவில்லை. எனவே தேர்ச்சியினை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் அமைக்கப்படவில்லை.
05	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% க்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	05	2022 ஆம் ஆண்டில் நாட்டில் எரிபொருள் விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டதால் அரச அலுவலகங்களிற்கு உத்தியோகத்தர்களை வரவழைப்பதை மட்டுப்படுத்த பொது நிருவாக சுற்றறிக்கை 16/2022(11) மற்றும் 22/06/2022 திகதியிலான பொது நிருவாகக் கடித எண் PUB/ADM/SEC/07 இல் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களை வரவழைப்பது மட்டுப்படுத்தப்பட்டது. அதேபோல் நாட்டினுள் அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரம் நிதி ஒதுக்கப்பட்டது. இந்நிலைமையில் 2022 ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் குறிப்பிட்ட பயிற்சி நெறிகளுக்கு உத்தியோகத்தர்கள் குறைந்த மட்டத்திலேயே பங்குபற்றினர். அத்தோடு நாட்டினுள் நிலவிய இத்தகைய நிலைமையின் காரணமாக பயிற்சி நெறிகளை நடாத்தும் நிறுவனங்களினால் உரிய கால எல்லையினுள் பயிற்சிநெறிகள் நடாத்தப்படவில்லை. எனினும் மனித வள அபிவிருத்தி திட்டத்திற்கமைய 2023 ஆம் ஆண்டில் அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமுகமாக உத்தியோகத்தர்கள் பயிற்சி நெறிகளில் பங்குபற்றுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

06	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.	06	நிதி ஆணைக்குழுவிற்கு சட்டமொன்று தயாரிப்பதற்கு தீர்மானித்த போதிலும் அது நடைமுறைபடுத்தப்படாத காரணத்தினால் இப்பிரமாணம் உள்ளடக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டிற்கான நிதி செயல்திறன் கணக்காய்வு அறிக்கையில், 2019 ஆம் ஆண்டு வரை நிதி ஆணைக்குழு தயாரித்த செயல் திட்டத்தில் நிதி ஆணைக்குழுவுக்கான சட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், நிதி ஆணைக்குழுவுக்கான சட்டம் தயாரிப்பது 2019க்குப் பின்னரான செயல் திட்டங்களில் சேர்க்கப்படவில்லை. இருந்தபோதிலும், புதிய அரசியலமைப்புச் சட்டம் தயாரிப்பது குறித்த விவாதம் உடனடியாக தொடங்கியதையடுத்து, நிதி ஆணைக்குழுவுக்கான சட்டத்தை புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்கமைய தயாரிப்பது மிகவும் பொருத்தமானது என்று ஆணைக்குழு கருதியதால், சட்டம் தயாரிக்கும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

தயாரித்தவர்:.............................
என்.ஜீ.டி.கே.கமலநாத்
அபிவிருத்தி உத்தியோகத்தர்

சரிபார்த்தவர்:.............................
டி.கே.டி கன்னங்கர
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்

பரிந்துரைத்தவர்:.............................
எஸ்.டி.சி. சந்திரசிறி
கணக்காளர்

சான்றளித்தவர்.............................
எஸ்.கே. கொத்தலாவல
தலைமை கணக்காளர்
Sandya Kumudini Kothalawala
Chief Accountant
Finance Commission
No. 03, Sarana Mawatha, Rajagiriya

அங்கீகரித்தவர்:.............................
ஏ . ரி. எம். யூ .டி.பி. தென்னகோன்
செயலாளர்

A.T.M.U.D.B.Tennakoon
Secretary
Finance Commission
No. 03, Sarana Mawatha,
Rajagiriya.